கவனிக்க.-2023.06.16 ஆந் திகதிய 2337 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2338 - 2023 ජූනි මස 23 වැනි සිකුරාදා - 2023.06.23
2338 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | 42 |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** ஆயுர் வேதம் (திருத்தம்) சட்டமூலம் 2023, யூன் மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, யூலை மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, யூன் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


199 - B 082462- 353 (2023/06)

# நானாவித அறிவித்தல்கள்

## இசிவர அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

மதுர விதானகே ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் “இசிவர அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்” எனப்படும் சட்ட மூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:

(அ) வறிய பாடசாலைச் சிறுவர்களுக்கென விசேட சேவைகளை நடாத்துதலும் கல்விக்கென புலமைப்பரிசில்கள், நூலக வசதிகள் மற்றும் வேறு அவசியமான ஆதரவு மூலமாக உதவிகள் வழங்குதல்;

(ஆ) சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களை ஒன்றிணைத்து அவர்களது எதிர்கால முன்னேற்றுத்துக்காக செயற்படுதல்; மற்றும்

(இ) சிறுவர் மற்றும் மகளிர் மேம்பாட்டுக்கான சமூக வேலைத்திட்டங்களை உருவாக்கி அதனை அமுல்படுதுவதும் அதற்கான கல்வி மற்றும் பயிற்சிக் கருத்திட்டங்களை அமுலாக்கல்,

பிறவும் ,

மதுர விதானகே,
பாராளுமன்ற உறுப்பினர்.

06- 387

---

## புத்தஷிராவக்க பராமரிப்பு மையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

மதுர விதானகே ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் “புத்தஷிராவக்க பராமரிப்பு மையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்” எனப்படும் சட்ட மூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:

(அ) புற்றுநோய் காராணமாக துன்புறுகின்ற பிக்கு, பிக்குணிகள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்களுக்காக உடல்-உள ரீதியான சிகிச்சைகளை வழங்குதல்;

(ஆ) பிக்கு, பிக்குணிகள் மற்றும் ஏயை சமயத் தலைவர்களான புற்றுநோயாளர்களுக்கு பிரத்தியேகமான பராமரிப்பு நிலையமொன்றினை கொண்டு நடாத்துதல்;

(இ) புற்றுநோய்ச் சிகிச்சைக்காக மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு வருகை தரும் பிக்கு, பிக்குணிகள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்களின் வசதிக்காக தங்குமிட வசதிகளை செய்து கொடுத்தல்;

பிறவும் ,

மதுர விதானகே,
பாராளுமன்ற உறுப்பினர்.

06- 388

## சிங்கள தேசிய அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

சட்டத்தரணி பிரேம்நாத் சி . தொலவத்த ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "சிங்கள தேசிய அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:

(அ) சில் அனுட்டானங்களை , தியன நடவடிக்கைகள், போதி வழிபாடுகள் உட்பட்ட மத நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் , வழி நடாத்துதல் மற்றும் செயற்படுத்தல் மூலம் மதப்பற்றுள்ள சமூகமொன்றினைக் கட்டியெழுப்புதல்;

(ஆ) பௌத்த சாசனம் மற்றும் தேசியம் ஆகியன முகங்கொடுக்கும் ஆபத்துக்களை இனம் கண்டு அவற்றை இல்லாதொழிக்க செயற்படுதல்; மற்றும்

(இ) இல்லற- துறவற இருபாலாரிடையேயும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தர்ம தூதர்களை பயிற்றுவித்தல்;

பிறவும் .

சட்டத்தரணி பிரேம்நாத் சி .தொலவத்த,
பாராளுமன்ற உறுப்பினர்.

06- 386

---

## நம்பிக்கையாளர்களின் கிழக்கு சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

பிரேம்நாத் சி. தொலவத்த ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "நம்பிக்கையாளர்களின் கிழக்கு சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களை கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:

(1) கிறிஸ்தவ விசுவாசிகளின் நலனுக்காக பொருத்தமான எல்லா இடங்களிலும் சபைக்குரிய தேவாலயங்களை நிறுவி நிர்வகித்தல்;

(2) கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு அவர்களின் சமய மற்றும் யாத்திரை நடவடிக்கைகளுக்குத் தேவையான கூட்ட வசதிகளையும் தேவையான போது தேவையான பிரகாரம் வழங்குதல்;

(3) உலகின் எந்தப் பகுதிகளிலும் உள்ள கிளைகள், மையங்கள் மற்றும மையங்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்து, கட்டமைத்து, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களைச் செயற்படுத்துவதற்கு,

(4) ஓதடொக்ஸ் நம்பிக்கை பற்றிய அறிவை வழங்குதற்காக பைபிள் பள்ளிகள், கல்லூரிகள், விரிவுரை அரங்குகள் மற்றும் பயிற்சி மையங்களை நிறுவுதல்;

பிறவும் .

பிரேம்நாத் சி. தொலவத்த,
பாராளுமன்ற உறுப்பினர்.

06- 389

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.